உ

குருவே துணை.

திருச்சிற்றம்பலம்.

OFFICE OF THE REGISTR... 11 JUN 192... ...D.R.A.S

# திருப்புக்கொளியூர்
# அவிநாசியப்பர் கருணாம்பிகை
# பிரபந்தத்திரட்டு.

## விநாயகர் திருப்புகழ், சுப்பிரமண்யர் திருப்புகழ்.

இவை

கோயமுத்தூருக்கடுத்த

சிரவணபுரம் கௌமார மடாலயம்

ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகள் மாணாக்கர்

ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகளால்

இயற்றி,

கோயமுத்தூர்

கனகம் செட்டியாரவர்கள் குமாரன்

பருத்திவிதை மண்டி,

வெ. க. கந்தசாமி செட்டியாரவர்களது

பொருளுதவி கொண்டு,

கோயமுத்தூர்

ஆனந்தா பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

பிரபவ-ஸ்ரீ விருச்சிகரவி.

உ

ஓம்

திருச்சிற்றம்பலம்

குறள்வெண் செந்துறை.

அறிவாலறிதற் கரும்பெரும் பொருளை
விரலாற் சுட்டிய விமலனைப் பணிவாம்

# முன்னுரை

அன்பறிவொழுக்கம் பொங்கிய பெரியீர் ?

"அகரவுயிர் போலறிவாகி யெங்கும் நிற்கும் நிகரில் இறைவன் உயிர்கட் கருள்புரிவான் எளிவந்தெழுந்தருளியிருக்கும் சிவதலங்களுட், கொங்கேழ னாட்டுங்க மிகுந்தது, மங்கை பங்கன் தூவண மேனியோடு ஆவணங்காட்டி யாட் கொள்ளப்பெற்ற, நேராருமில்லா ஆரூரநம்பியார்" "நாட்டாரறிய முன்னாளினன் னாளலந்தவைம் படையின் பூட்டார்மார்பிற் சிறியமறைப்புதல் வன்றன்னைத் தாட்டாமரை நீர்மடுவின் கட்டணிமாமுதலை வாய்நின்றேமீட்ட" திருப்புக்கொளியூராகும்.

அத்திருப்பதியில் அமர்ந்தருளியுள்ள அவிநாசியப்பர், அவர் மருங்கொருனாளும் பிரியாப் பெருங்கருணாம்பிகையம்மை, அன்னோர் திருவருட் செல்வர்களாய மூத்தபிள்ளையார், முருகப்பெருமான் ஆகிய இவர்கள் தந்திருவடித் தாமரைகளுக்குச் சாற்றிய பாமாலைகளின் தொகுதியே இந்நூற் றொகுதியாகும்.

இப்பாமாலைகளைத் திருவருட்செயலாற் றொடுத்தவர்,
தேங்கமழ் மலர்ப்பொழிற் சிரவணபுரம்வாழ்
தவிரா வாய்மைக் கவுமாரமடத்து
அடியார் குழுவிற் றலையாந்தகைமையும்
ஆக்குமொழியும் நீக்கமில்தவமும்
தெருளுஞ்சீர்சாலருளும் பொருந்திய
சந்தப் பாவலர் கந்தசாமிகளாவர்

மூவாசை முற்றுமொழித்த ஓவாத்தவ வுத்தமாகிய அடிகளர், அருளாற் றொடுத்த இப்பாமாலைகளை அன்புடன் ஓதுபவர்கள் இம்மைமறுமையின் பழும் செம்மை வீடும் எளிதேயெய்துவரென்பது அறிவாற்சிறந்த பெரியோர் துணிந்த உண்மை. உண்மை. உண்மை.

3538
894-8118

இந்நூற் றொகுதியை அழுத்தெழுத்திற்பதித்துதவிய திருவாளர் கந்தசாமி செட்டியாரவர்கள். இறைவன் திருவருளால்,எண்ணிய எண்ணியாங் கெளிதி னெய்தி, நோயின்றியன்ற யாக்கையராய் நீடூழிவாழ்க.

தத்ததனா தனதானத் தனதந்த தானனா
பித்தனொ விகழ்வோனுக் கருடந்த நாதனார்
பெட்டனயா வையுமீயுத் தமிபங்கின் மேவினாள்
மத்தகயா னனன்வேலைக் கரமொன்றின் மேவினான்
மற்றிவர்தோ ளவிநாசிப் பிரபந்த மாலையே
பத்தர்குழா மகிழ்வாகத் தமிழ்கொண்டு வேயினார்
பட்டிமையே னுளமேவிப் பொலிகஞ்ச பாதனார்
முத்தமிழா கரர்சீலத் தவர்கந்த சாமியார்
முத்தியொடே வையுமேவிப் புவியின்பு கூடவே

இங்ஙனம்

அடியாரடிமை

கோவை: கு. நடேச கவுண்டர்.

குருவே துணை.

# சாத்து கவிகள்.

## சிரவணபுரம் கௌமார மடாலயம்,
## ஸ்ரீமத் சுந்தர சுவாமிகள் இயற்றியன.

### கட்டளைக் கலித்துறைகள்.

என்னேயதிசய மென்பாலொரு னமெய்தி யன்பிற்
சொன்னேனெனப் படித்தானவிநா சியின்றோன்றல்பத்து
மின்னேரிடைகொள் கருணாம்பிகைதன் வியன்கொள்பத்து
மன்னோ மிகச்சுவை பெற்றிடக்கண்டெனக மகிழ்ந்தே (1)

அம்பிகை மீதொரு நூறாகினுஞ் சொலென்னாசை யென்றேன்
கம்பிரத் தோடகன்றான் மறுநாள் கற்பனைக் கவிகள்
தெம்பொடெழுதிக் கொணர்ந்தா னெனன்மெய்மை தேறிடுங்கா
னம்பிடுந்தெய்வக்குருநாதன் றன்னரு ணாடுமினே (2)

என்னோரிளைய னறிவிற்பெரியவ னென்னையொத்தார்
தன்னோருரிமையன் சாதுக்கணேயன் றனதுளத்தி
லென்னேரமுங்குரு பர்தாம் புயத்துணை யேற்றியன்பிற்
றன்னேர் தமிழிற்றுதிபாடும் வாயுடைச் சற்குணனே (3)

ஒருமையிற் றான்கற்ற கல்வியொருவற் கெழுமையுமே
வருமெனச் சாற்று சொற்கின்னோனொருகரி வாய்திறக்கி
லருமைகொள் சந்தவண்ணங்கண்முதலா மளவிறந்த
பெருமிதப்பாடல்கள் வந்தி டனிச்சயம் பேசிடேனே (4)

தமிழினிற் பாவல பண்டிதத்தன் மையுஞ் சார்ந்தடுத்தோர்க்
கமிழ்தெனக் கேள்விகடுய்த்திட வூட்டு மறிவுடையோன்
சிமிழ் முலைப்பேதை யர்தங்நசையே முதற்சேர்ந்த வெல்லா
முமிழ்தாத் தக்கவனாங்கந்தசாமியெ னுத்தமனே (5)

முன்னொரு நாளிற் பனவசச் சிறுவன் முதலைகொள்ளுந்
தன்னொருயிரை நெடுநாளகன்று தரற்கிடமாம்
பொன்னவிர் பூந்தடத் தாற்சூழும் புக்கொளியூர்ப்பதிக
மென்னவருமை மிகுசுவையோ டிசையேய்ந்ததுவே (6)

கருணைக்கிடமாயவிர் கருணாம்பிகை கான் மலரைத்
தெருளிற் புகழ்சந்தமாலை பதிகந்தினம் படிப்போர்
மருளைத்துறந்து விண்ணாட்டின்பங்கைத்து வராதொழிக்கு
மருளிற்புகு வதற்கை யமுண்டோ வில்லையாய்ந்திடினே (7)

குருபாதமேகதி.

## சிரவணபுரம் கௌமார மடாலயம் அடியவர்களி லொருவராகிய ஸ்ரீமத் இராமசாமி சுவாமிகள் இயற்றியன.

### அறுசீர் விருத்தங்கள்.

தன்னலங் கருதாதன் பிற்றனையடுத் தோரை யெல்லா
மின்னயத்தாலே தேற்று மென்குரு விராமானந்தன்
பொன்னடிக் கமலம்போற்றெம் போதகா சிரியனான
நன்னலக் கந்தசாமி நாற்கவி பாடும் வல்லோன் (1)

நன்னலப் பேறன்பர்க்கு நல் கவி நாசியப்பற்
கன்னவன் வலப் பாகத் திலமை கருணும் பிகைக்குஞ்
சொன்னயம் பொருணயஞ் சாறுடை யல்களணிந் தான்றன்மை
யன்னவாகனன்றன் றேவி யன்னவ ரறி தற்பாற்றே (2)

---

## சிரவணபுரம் கௌமார மடாலயம் அடியவர் களிலொருவரான ஸ்ரீசின்னச்சாமி சுவாமிகளியற்றியன.

### அறுசீர் விருத்தங்கள்.

பார்புகழ்பெருமை மிக்க பத்தியின்பொலிவா ருண்மைச்
சீர்திகழ் தொண்டர் சூழ்கௌமாரசிற் சபையினுப்பண்
வார்குழன் மாதர்பொன்பூ வாஞ்சை யில்லார்கண்மெச்சக்
கார்தகப் பொழியு நாவோன் கதியருள் வாஞ்சை தோய்வோன் (1)

கற்றவரமிழ்தென் றுரைப்புங் கவிபல வண்ண மீருச்
சொற்றமை திறஞ்சால் கந்தசாமியாந் தூய னெற்கு
நற்றவ நல்கிராம னந்ததே சிகன்கண் ணேக்காற்
றுற்றசொல் பொருண் மெய்ப்பத்திச் சுவைமிகப் பொருந்தமாதோ (2)

### கோச்சகக் கலிப்பா.

அன்புடையா ருளங்களிப்ப வரியகவி களினியற்றித்
தென்புணர்புக் கொளியவிநா சிக்கருணும் பிகைசெல்வி
மின்புணர் செம்மலர்த் திருத்தாண்மீதணிமா லைத்துதியை
யின்புடன்கற் பவர்கேட்போர்க் கிகபரசாதன முறுமே

---

## ஷை மடாலயம் அடியவர்களிலொருவரான ஸ்ரீரங்கமுத்து ஐயா அவர்கவியற்றியன.

### கட்டளைக் கலித்துறைகள்.

மலரவனுவிலிருந்துல கோர்க்கு மறைவிதிநா
விலகச்சொல் வாணிநின் னுவியைந் தன்பர்க ளோத்திடவே
தலவவி நாசிப்பெருங்கரு ணம்பிகை தன்றுதிப்பா
நிலவவிண்டாளுயர் வோர்தரு மேலவர் நெஞ்சகமே (1)

பொன்னே பொருளெனும் புன்கவிபேசுவர் பொய்ப்புலவோ
ரென்னேநின் றெய்வதுதிப் பாட்டருமை யிசைப்பதுவோ
பொன்னே மருமல ரோவென்றணிந்தன்பிற் போற்று நர்க்குத்
தன்னேர் பதந்தந்தி டுங்கருணம்பிகை தானுவந்தே (2)

வண்ணச் சரபன் மெய்ப்பேரனென் றென்னைவலிந்தடிமை
கொண்ணற் குருவிரா மானந்தநாதன் குழவியென்றெற்
கண்ணற் றகைக்கந்தசாமி நன்னும மணிகுவைநின்
றிண்ணக் கவிநலந் தேர்பவர் வாணியுஞ் சேடனுமே (3)

---

## சிரவணபுரம் கௌமாரசபை அடியவர்களிலொருவரான மகா-ா-ா-ஸ்ரீ கண்ணப்ப சுவாமி இயற்றியன.

### எழுசீர் விருத்தங்கள்.

திருவளர்கொங்கு நாட்டினின்மேலாஞ் சிரவணபுரத்திடைஞான
வருண்மலர்விரிந்து கமழத்தன் றொண்டரகவிரு ளொழிந்திடவுதித்த
பருதியாமிராமானந்தேசி கன்மெய்ப் பதந்தொழுஞ்சீடனுந்தகைகால்
பொருவருகந்த சாமிப்பேர்த்தோன்றல் புக்கொளியூரவிநாசி

கருணையம்பிகை தன்றிருவடிக் கணியுங் கனிவுறும்பாமாலை
பொருணயம் பொலியும் யமகமாதியவும் புகன்று தோத்திரம் புரிவார்க்
தருணமெய்விளக்கிப்பந்த பாசத்தின்சார் பொழித்தம்பிகை பாதப் [குத்
பெருவெளி புகச்செய் திடுமெனிலதன் சீர்பேசி முற்றிடுந் தரத்தவன்றே

---

## கௌமாரசபை அடியவர்களிலொருவரான மகா-ா-ா-ஸ்ரீ ந. பெ. பெத்து செட்டியார் இயற்றியன.

### கட்டளைக் கலித்துறைகள்.

சொற்சுவையோடு பொருட்சுவையாவுந் துலங்கவன்பி
னிற் சுவைப்பாக்கள்பல் லோர்களின்பெய்த வியற்றமிழி
னற் சுவைதோய் கந்தசாமிபெருங்கரு ணம்பிகைமேற்
சிற்சுவைதோய்தாச் சூட்டுபாமாலை தித்திப்பதுவே

அனிச்ச மலரினு மென்றூளவிர் கருணாம்பிகைமே
லினிச்ச தமிழ்மொழி யார்கந்தசாமி யியற்று துதி
செனிச்ச பிறவிப் பிணிதீர்மெய்ப் பத்திச் செழிப்பருண்மா
வீனிச்ச தாகாலமு முண்ணெகவோது மினெம்மினரே

---

## கௌமாரசபை அடியவர்களிலொருவரான

### கணவாய்ப்பாளையம்

## மகா-ா-ா-ஸ்ரீ இராமசாமி செட்டியார் இயற்றியன.

### அறுசீர் விருத்தங்கள்.

எந்தையா மிராமானந்த வீசனு ரருளால் வந்த
கந்தமார் புகழ்ச் சீர்சான்ற கந்தசாமிப்பேர்த் தோன்றல்
சந்தனப் பொதியைக்கும்ப சம்பவன் றமிழினாலே
சந்தமாதியபல் பாடல் சாற்றிடுந் தகைமைவாய்ந் தோன் (1)

இக்குவ லயத்துண் மேலா யிலங்கு கொங் கிலவி நாசிப்
புக்கொளியூரீசர்க்கும் பொலிகரு ணாம்பிகைக்குந்
தக்கசொல் பொருணயஞ்சால் சந்த நற்பதிகமாலை
மிக்க சீர்யமக மாநிவிண்டனன் கனிவான்மாதோ (2)

அந்தமில் கருணைச்செல்வியசைத் தலினிசைத்த பாக்க
ளுந்தகங் கரையகாளு முவந்துதோத்திரஞ் செய்வார்க்குச்
சிந்தை யினினைத்த வெல்லாஞ் சிற்பரை நல்கியீற்றிற்
சுந்தரக் கமலத்தாளிற் றேய்த்திடுஞ் சரதமாமால் (3)

---

## ஷை யார் குமாரர் சிரஞ்சீவி சின்னப்ப செட்டியார் இயற்றியன.

### அறுசீர் விருத்தம்.

பத்தர்க ளிதய வாசப் பரம சற்குருவனுகி
முத்தர்கள் புகழிராமனந்த மாமுனிவன் பாதம்
நத்தடியவர்க ளன்பி னயந்திடுங் கந்தசாமி
யுத்தம னருளாற் சொற்று னுயர்ந்த தோத்திரங்கண்மன்னே (1)

### எழுசீர் விருத்தம்.

அத்தகைத் துதிக ளவையெனி லவிநா சிப்பதி யாலயத் தமர்ந்த
வத்தனுக் கிசையார் பதிகமெய்க் கருணாம் பிகைதனக் கணிபெறு பதிகம்
வித்தக மாலை யமகஞ்சந்தமென விளம்பினனவைகளைத் துதிப்பா
ருத்தமத்தகை யார்பனிலத்தெய்தி யுமைபதம்பெறுவது மெய்யே (2)

9

திருப்பேரூர்

# ஸ்ரீமத் சாந்தலிங்க சுவாமிகள் மடாலயம்

## சத்வித்தியா சன்மார்க்க சங்க அமைச்சராகிய

கோயமுத்தூர்–விளாங்குறிச்சி

## V. N. மருதாசலக்கவுண்டர் இயற்றியவை.

### நேரிசை வெண்பாக்கள்.

“ முருகனருண் மூழ்கியிரண் டற்றமுனி மாதைச்
சரபவண்ண தண்டபா ணிப்பேர்க்—குருபாற்காண்
முத்தூர் குளக்கோய முத்தூர்ச் சிரவணவூர்
நத்திராமா னந்த நம: ”

எனும்பித்தா னல்லறமா மில்லறந்தோ யாதே
மனந்துறந்து வந்துமந்தோ ! கன்னித்—தனத்தமிழைக்
கூடிமலே யாளக் குமாரிதனை யீன்றெடுத்துப்
பாடுகந்த சாமிகுடும் பன்,

முத்தமிழி னூற்பாவின் முன்மிளிர்வண் ணத்தொடையு
மத்தனிரா மானந்த வாண்டவன்பூ—வொத்தவடிக்
காக்கியருச் சித்தாடி யானந்தச் சித்தாடித்
தேக்குந் தியானத் தினல்.

பவந்துடைத்தாள் புக்கொளியூர்ப் பண்ணவற்கோர் பத்து
மவிநாசி வாழ்கருணை யம்பா—ளவிரோத
ஞானப் பதாம்புயக்கு நற்பதிக மாலைசந்தத்
தேனியமக வந்தா தியும்.

தந்தத் தலத்தேக தந்தனுக்குங் கந்தனுக்குஞ்
சந்தத் திருப்புகழ்த்தார் சாத்தினனு—லெந்தஞ்
சிரவணவூர்க் கௌமார தேசிகபீ டத்தாய்
தருகந்த சாமியுயர் சாது.

### சந்த விருத்தம்.

தந்தன தத்ததன தானன

பந்தபா சத்திமிர்கள் பாறுமோர்
பண்புதேர் முத்தியவி நாசிவாழ்
எந்தையா திக்கும்வல மாகுதாய்
இன்பவா னைக்குமயில் வேலன்மேல்
கந்தசா மித்தவசி பாடலே
கண்டுபா சிக்கவழி யாகிமேல்
வந்துநே ரப்பிறவி வாதைதீர்
மந்திரா சத்திகள்கு லாவுமே.

11

உ

சிவமயம்.

## திருப்புக்கொளியூர்

# அவிநாசியப்பர் பதிகம்.

## கலித்தாழிசைகள்.

*பமரத்திர ளிசைகொன்றைவெண் பனிமாமதிச் சடையு
நிமலப்பதத் துணையாதியு நிலவுற்றெனா ளிலகாய்
கமலத்தய னொடு மாதவன் காணாவடி முடியா
ரமலத்திரு வவிநாசியப் பாவஞ்சலென் றருளே. (1)

மாதா பிதா வோடின்புற வந்தாள்குரு தெய்வ
நீதானென வேயன்பொடு நெஞ்சிற் கருதுமெனைக்
கோதார்கொடு மாயைக்கிடை குமையும்படி விடிலோ
ராதாரமா ரவிநாசியப் பாவஞ்சலென் றருளே. (2)

ஒன்றோவிரண் டோவெண்ணிட வொண்ணா தனவாகிக்
குன்றோ கட லோவென்றிடக் குறுகுற்றன துயர
மன்றோலமிட் டடைந்தாருய்வா னாலம்புசித் தவனீ
யன்றோ புக லவிநாசியப் பாவஞ்சலென் றருளே. (3)

தினைத்தன்னவொர் பொழுதும்மனஞ் சிதறாதுன தடியே
நினைத்துச்சுகக் கடன்மூழ்குவா னெஞ்சிற்கொளு மென்னை
வினைத்துட்டர்செய் துயருன்னுடன் விள்ளுஞ்செயன் மிகையே
யனைத்துந்தெரி யவிநாசியப் பாவஞ்சலென் றருளே. (4)

திரைமிக்கதிர் கடலுண்டெழு சினைமாமுகி லென்னக்
கரையற்றபே ரன்போடிரு கண்ணீர் பொழிந்தின்பா
யுரையற்றென துளமற்றல வுயிரற்றுள போதத்
தரையற்றிட வவிநாசியப் பாவஞ்சலென் றருளே. (5)

அம்பாகிய கண்ணாரிடை யருந்துஞ்சுக மென்னும்
வெம்பாழ்நிர யத்தென்றனை வீழாவண்ண மாளாய்
வம்பார்பொழிற் காசித்திரு மந்தாகினி யென்னு
மம்பார்த்தெழு மவிநாசியப் பாவஞ்சலென் றருளே. (6)

நலனுற்றநின் னடியேநின நாடாசைகொள் வேனை
யுலகக்கொடு மாயைக்கிடை யுழலச்செயன் மரபோ
சலமுற்றிடு தக்கன்புகல் சாபங்கெடச் சடைமீ
தலவற்புனை யவிநாசியப் பாவஞ்சலென் றருளே. (7)

---

*பமரம்—வண்டு.

பாலுஞ்செழுந் தேனுஞ்சுவைப் பாகுங்கலந் தெனப்பா
நாலுங்கொடுன் றிறமேதின நாளேதிட விழைந்தேன்
மாலுங்கதி ரவனுங்குளிர் மதியுந்தொட வானத்
தாலும்பொழி லவிநாசியப் பாவஞ்சலென் றருளே. (8)

கரையற்றபே ரின்பப்பெருங் கடலுன்புடை யுறவுந்
தரையுற்றவித் துன்பத்தில்யான் றளர்வுற்றிடன் முறையோ
வரையுற்றிடு முழுவைச்செழு *வடகத்தினை யெழிலா
ரரையிற்புனை யவிநாசியப் பாவஞ்சலென் றருளே. (9)

மாத்தங்கிய வுரஞ்சேர்திரு மாலுங்குளிர் வனசப்
பூத்தங்கிய வேதாவுந்தம் போதங்கொடு தேரா
மீத்தங்கிய திருத்தாண்முடி வினையேனறி குவதோ
வாத்தங்கிய வவிநாசியப் பாவஞ்சலென் றருளே. (10)

மானேர்விழிக் குருகென்சிறு மனநின்சுக வடிவத்
தேனேர்பதத் துணைநாடியச் செயல்கொண்டிட லுளதோ
வானேர்கதி ரூர்தேர்வரு வழிமாறிட வசையு
மானேர்கொடி யவிநாசியப் பாவஞ்சலென் றருளே. (11)

பரவைக்கொரு தனிநாயகன் பாடற்குளம் பரிவாய்க்
கரவைச்சிறு மகவைத்தரக் காணுந்தயைக் கடலே
யிரவைப்பொரு மல நின்றெனை யெடுத்தாடனிற் கரிதோ
வரவைப்புனை யவிநாசியப் பாவஞ்சலென் றருளே. (12)

திருத்தங்கிளர் பேரன்பினர் சிந்தைப் பெருந்தளியி
னிருத்தஞ்செய்நின் பதத்தன்பறு நெஞ்சுற்றவ னெனினும்
வருத்தந்தவிர்த் தாள்வாயென் றுன் மலர்த்தாட்ச ரணேனே
னருத்தம்பொலி யவிநாசியப் பாவஞ்சலென் றருளே. (13)

புவிமாதெழிற் றிலகானனம் புரைபுக்கொளி நாம
மவிர்சீர்நக ரவிநாசியப் பன்னஞ்சலென் றருள்வான்
சவிசீர்ச் சிர வணமார்கந்த சாமிச்சிறி யேன்சொன்
னவில்வார்சிவ னருளாற் பய னுன்கும் பெறு வாரே.

—:: முற்றிற்று. ::—

தெய்வமே துணே.

---

*வடகம்—தோல்.

உ

குருவே துணை.

தேவி சகாயம்.

## திருப்புக்கொளியூர் அவிநாசித்தலத்தில்
## திருக்கோயில் கொண்டு விளங்கும்

# ஸ்ரீ பெருங்கருணாம்பிகையம்மன் பதிகம்.

### காப்பு.

### வெண்பா.

திக்கொளிசால் சீர்த்தித் திரள்சா லவிநாசிப்
புக்கொளியூர்க் கோயிலின்பம் பொங்கிடவே—புக்க
கருணம் பிகைபதிகக் காப்பவடன் சேய்பொன்
னருணம் புயச்சே வடி.

### இரட்டையாசிரிய விருத்தங்கள்.

கொங்குற்ற கொன்றையொடு பைங்கட்பு யங்கமிரு
        கொம்புற்ற திங்களொலி தோய்
குளிர்வான திச்சடில மிளிர்தேவ னுன்றன்மிசை
        கொள்ளுற்ற வாஞ்சைமிகையாற்
பங்குற்ற மட்டலது நெஞ்சத்த லத்தினிடை
        பதிவாக வதிமோகமாய்ப்
பாவித்து வரைவுற்றெ ஞவிக்கொர் துணையான
        பாவாயெ னப்புகலு நீ
யெங்குற்ற மனதினிடை தங்குற்றி டிற்பெருமை
        யின்றாகு மென்றெண்ணிலோ
விகமிசைக் கவிராசன் மகளெனப் போனகதை
        யிலதெனப் பேசவருமால்
கங்குற்றி டாதபடி பொங்குற்ற வருளுடன்
        கவிஞரு மவிநாசியிற்
கனகாம்ப ரக்கோவி லிடமோங்கு பொற்போவில்
        கருணம்பி கைத் தேவியே (1)

கருமாலு ழக்கும்பி றப்பிறப் புற்றுட்
        கலங்குமெளியேற்கு நினதோர்
கழல்வீடு தந்தருடி யதுபெறற்கானவிதி
        கடையனேற் கின்றெண்ணிலோ

திருமாலு ரங்குலவி லக்குமித னமிசமுந்
திசை முகங்கொண்டவொருவன்
செந்நாவி லங்குகலை மாதமிச மதுவுமென்
சிறுமனது றப்புரிவையேற்
பெருமானு வக்கு நின துருவலங் காரஞ்செய்
பெற்றியொடு னற்றமறுசீர்
பேசித்து தித்து நின தொப்பிலா னந்தமெய்ப்
போருட் கடன்மூழ்குவேன்
கருவானம் வெளிறமிகு கருணைமழை பொழியவே
கவினுரு மவிநாசியிற்
கனகாம்ப ரக்கோவி லிடமோங்கு பொற்போவில்
கருணம்பி கைத் தேவியே. (2)

வானுற்ற தேவர்கன வினுமறிய வரியதாய்
மணிமுடியின் மீதமைப்பின்
மாடுற்ற வொரு பரம னோடுற்ற வுனதொப்பின்
மனமுற்ற சினமுற்றவும்
பானுற்ற பொழுதிலிம மானுற்றெ ழிந்தருள்
பழுத்துத்த லைக்க வருளுன்
பதமுற்ற பெருமை நின தளவிற்ப டாதவோர்
பண்புற்ற தேபோலுமா
லியானுற்ற துயரமுட னோதுற்ற முறைசணீ
யறியாத வொன்றென்பனோ
வென்மைவினை நிற்றடைசெய் வன்மையினை யுற்றுள
தெனப்புகல்வ னோதெரிகிலேன்
கானுற்ற சோலையில்விண் மீனுற்று லாம்வளக்
கவினுரு மவிநாசியிற்
கனகாம்ப ரக்கோவி லிடமோங்கு பொற்போவில்
கருணம்பி கைத் தேவியே. (3)

மையுற்றவாணவ விருட்டுற்ற கானினிடை
மருளூற்ற மாயைவடிவார்
மண்ணெனப் பெண்ணெனப பொன்னெனப்பேருற்று
வளரெட்டி வேம்பிலவிடை
மொய்யுற்ற கனிவகைக டுய்யுற்றுளின்படைய
மூடமன மான கவிதான்
மோகத்தி னோடைவைகொள் சாகைக்கணே யதிக
மோகத்தி னொடு தாவியே
மெய்யுற்றுவாழவுனி னையுற்ற வெனை யீர்த்து
வெய்துற்று வாவுதந்தோ
விறலற்று ஞது.துணை பெறநத்தி னேனடியன்
வேண்டியப டிக் கருட்சீர்
கையுற்று வாழவருள் செய்யற்ற மீதுமிகு
கவினுரு மவிநாசியிற்
கனகாம்ப ரக்கோவி லிடமோங்கு பொற்போவில்
கருணம்பி கைத் தேவியே. (4)

புலமானவைந்தலைகொண் மனநாகம் வாழ்க்கையுறு
புற்றொத்த புலைவாரிதோய்
பொள்ளுற்றநவவாயில் கொள்ளுற்ற நித்தமுறு
பொய்க்குட் சிறந்தவரசாம்
மலபாண்ட மிதனையொரு நானெனக்கருதியே
மையற்கடற்குண் மூழ்கி
மனையென்று மகவென்று முறவென்று மிகலென்றும்
வாடென்மதி யென்மதிகோலோ
நலமார்ந்த மெய்யடியர் தம்மிருதயக்கமல
நாண்மலர் மலர்ந்துநாறி
நறவான பேரின்ப மிகவூறிடப்புரியு
ஞானவடிவாம் பரிதியே
கலமான திருவடித்துணைமேவி யருளோடு
கவினுரு மவிநாசியிற்
கனகாம்பரக்கோவி லிடமோங்கு பொற்போவில்
கருணாம்பிகைத் தேவியே. (5)

கமலாதனத்திலுறை திசைமாமுகக் கடவுள்
கையொன்றெழுத் தழியவுங்
கடிமலர்த்திரளுந்து திறன் மாரவேள்புரி
கலக்கமுற்றற் றொழியவு
மியமராசனது கரம்பெறுபாசவலை வலிமை
யீருற்றுலைந்து கெடவும்
இனியவுனதடிகளெனு முடியையெனோர் முடியின்மிசை
யெந்நாளிருத்த விசைவாய்
முமலாசகற்று பரமுத்தரின மின்போங்க
மூழ்கு பரசுகவாரியே
முருகனொடு கணபதியெனிருசுடர் முளைத்தெழுமோர்
மோனமயமான வெளியே
சமனீடுமருள் குலவுமொரு காசியினில்வாசி
கவினுரு மவிநாசியிற்
கனகாம்பரக்கோவி லிடமோங்கு பொற்போவில்
கருணாம்பிகைத் தேவியே. (6)

நீரார்ந்தமுகிலன்ன வளிகுலவு தார்கொண்டு
நீண்டுதிகழளக நிரையும்
நிலனுற்ற வானுற்ற பேரிருளறச்சாடு
நிலவுமிழு மதிவதனமும்
வாரார்ந்த பரஞான வமுதநிறைவுற்றகன
வரைபோன்றகுச யுகளமும்
மகிமைபெறு திருவுள்ள வருள்வாரிவாரிமிக
மாணடிவழுத்து மியல்சேர்
கூரார்ந்த மதிபெற்ற மெய்யடியர் தம்மீது
கொட்டுமிரு திருவிழிகளுங்
குடிகொண்ட நெஞ்சையுனதடி கொண்டுநானெனக்
கொடிகொண்ட பாவவடிவக்

காரார்ந்த மூலமலமொழிய வருள்வாயருட்
கவினுரு மவிநாசியிற்
கனகாம்பரக்கோவி லிடமோங்கு பொற்போவில்
கருணாம்பிகைத் தேவியே. (7)

சுருதிகுருவடிவாகி வந்தெனது ளத்தினிடை
தோய்ந்திடும யக்கமுழுதுஞ்
சுட்டொழித்திட்டுமெவ ணிலைபெற்றிருக்கு மோர்
சுயாநுபவ மெய்திடாமற்
பருதிமறையச்செய்திடு பணியன்ன மாயையிற்
பருவரற்பட் டெய்த்தனன்
பகலின்க ணிகழுனது திருவடிவமியான்கண்
படைத்த பேறெய்தும்வண்ணம்
ஒருதினத் துதவியருண் ஞானசம்பந்தனுக்
குதவமுத முதவி லுன்னை
யோகோ தடுப்பவர்களியாவருள ரவ்வா
றுஞற்றிடிற் குறைவுவருமோ
கருதிலை கொறுய்விடிற் சேயாரணைப்பர்புகல்
கவினுரு மவிநாசியிற்
கனகாம்பரக்கோவி லிடமோங்கி பொற்போவில்
கருணாம்பிகைத் தேவியே. (8)

திருவிருத் தகிரியிடை யுனதருட் கழலென்ற
சிற்சுகோததியின் மூழ்குந்
தீரமிக்க குமாரதேவனுட் குலவிநீ
செய்சுத்த சாதகத்தின்
மறுவுற்ற வநுபவமுனக்குவர வென்றுசி
மாற்றநீ செப்பிலுன்றன்
வாயின்முத்தஞ்சிந்து மோசிரசி லின்னடிகள்
வைத்திடிற் கன்றலுறுமோ
வருளூற்ற நீமலையி லெனதுட்குலாவவுநி
னடிமையானலைதன் முறையோ
வடிமைபடு துன்பினைக் காண்டொறு முனக்குளத்
தானந்தம்விளைவது கொலோ
கருதுற்ற நின்செயலெ தேனுமென் பாக்கியங்
கவினுரு மவிநாசியிற்
கனகாம்பரக்கோவி லிடமோங்கு பொற்போவில்
கருணாம்பிகைத் தேவியே. (9)

கருத்தங்கி ரத்தமொடு புன்புலைச் சிலைநீரொர்
காணுறெனப் பெருக்குங்
கமரீ யெறும்பாதி மொய்க்காது மாடவர்கள்
கண்டருவருத் திடாதும்
வருத்தமுற வுரமீதெ ழுஞ்சிலந்திக்குமிக
மானமருவுற்று மடவார்

வண்மைபெறு பட்டுடையினான் மறைக்கிறதாகும்
வாய்மையை யுணர்ந்திடாதே
விருத்தங்கொ ளென்னெஞ்சகஞ் சரக்கேதிவர்கண்
மேவுற்றதென்று நாடி
விநோதமிக் கலைகின்ற துன்னருட் பதமென்னும்
வெளியிடைவிராவ லுளதோ
கருத்துன் பதத்திற்கொளன்பரிரு தயமன்ன
கவினுரு மவிநாசியிற்
கனகாம்பரக்கோவி லிடமோங்கு பொற்போவில்
கருணாம்பிகைத் தேவியே. (10)

கதிவேண்டி லேனுனைப் பதிவேண்டி லேன்மருக்
கற்பகப் பொன்னுலகையாள்
கனவாகனத்துலவு கனவானலத்தையொரு
கனவூடும்வேண்டிலேன் மால்
திதிவேண்டி லேன்மற்றை யின்பமென வோதிடுஞ்
செயலு ளொன்றையும் வேண்டிலேன்
சித்தமிசை யிவனேது கேட்டிடுவ னோவெனச்
சிறிது மஞ்சேன் மகிமைசான்
மதிவேண்டு பேரறிஞர் வேண்டுகின திருதிரு
மலர்க்கமல பாதமிசையே
மாருதபேரன் பளித்தெனுடல் பொருளாவி
வாஞ்சைகொடு கொளவேண்டினேன்
கதிர்வேண்டு மணிமாட நிரையோங்கு வரைபோன்ற
கவினுரு மவிநாசியிற்
கனகாம்பரக்கோவி லிடமோங்கு பொற்போவில்
கருணாம்பிகைத் தேவியே. (11)

---

கருணாம்பிகை துணை.

உ
குருவே துணை
தேவிசகாயம்.

# கருணாம்பிகை மாலை.

## காப்பு

### கட்டளைக் கலித்துறை,

கராவானந் தச்சுதற் கால்புக் கொளியவி நாசிக்கனே
விராவானந் தக்கரு ணாம்பிகை யம்புய மேலணியும்
பராவானந் தக்கவி மாலையொன் றன்பிற் பகர்ந்திடுமா
விராமானந் தக்குரு தேசிகன் செம்பொனிணையடியே

## நூல்

வண்டுண்ட பூங்குழ லுங்கதிர் மாமதி வத்திரமுங்
கண்டுண்ட சொற்செங் கனிவாயுந் தாண்முற் கரைவவெலாந்
தொண்டுண்ட வன்பருட் டோன்றுதல்போலெனுட் டோடகத்து
மண்டுண்டமர்தி யவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (1)

ஏயென் றிடுமுன மோர்படை யின்றி யிகலவரூர்
தீயென் றெழிநகை யார்குரு வானசெவ் வேளினையுஞ்
சேயன் றெடுத்துமுத் துஞ்செய லானிற் செகத்தவர்க்கு
மாயன் றறிந்தே னவிநாசி வாழ்கரு ணாம்பிகையே, (2)

மாதவ னென்றுல குள்ளாரெ லாந்திரு மாலைச்சொல்வ
ரேதவன் பெற்றதொன் றென்றிருந் தேனுள வின்றறிந்தேன்
சோதரி யென்றுல குக்கன்னை யாமுனைச் சொல்லக்கொண்டா
னாதவி னான்மெ யவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (3)

நினையான்றொ ழாவொர் சிறுபருவத்தினி னேடிவந்து
வினையேனை யாண்டனை நாடுமிக் காலருண் மேவிலர்போற்
பனையே யனைய துயர்படக் கண்டுமுட் பார்த்துநின்றா
யனையே முறைகொலவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (4)

வேதன் படைத்தலுத் தன்ன மிரங்கிலன் வெற்றிமது
சூதன் றிதித்துளஞ் சோர்ந்தவனாயினந் தூங்கினன்றென்
னாதன் பிடித்தலுத் துன்னா யகனுதை நாடிநின்றா
னாதன் சரண மவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (5)

பஞ்சேந் தியப்பகை வோர்செயலாலுட் பந்தபதைத்தேன்
பஞ்சேய்ந்த நின்றிருப்பாதாம் புயப்புகழ்ப் பன்மதுரா
புஞ்சேந் தமுதநிகர்பாட லன்பிற் புனையனையப்பெற்றே
னஞ்சே னினிச்சற் றவிநாசி வாழ்கரு ணாப்பிகையே. (6)

களபம்விராவிய பொன்வரை யென்னக் கவின்றருமின்
புளகித ஞானத் தனந்தரு பாலைப் புகலியர்கோன்
கொளவினு மென்னனை யார்க்கந்த மாட்சி கொடுக்கில்வரு
மளவற்றசீர்த்தி யவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (7)

எனக்கோர் செயலதுஞ் சற்றிலை யானீண்டிசைப் பதென்னென்
மனக்கோயின் மேவிய நீயறியாவொர் மறைவகைகொல்
வனக்கோ கிலமன்னை நீயெது செய்கினும் வாழ்வெனக்கே
யனக்கோன் புகழு மவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (8)

காணார் திருவடி சேர்த்தாடி யச்செயல் காணவின்றேல்
வானா ரமுதினு மேலா யிலங்கு மதுரபுஞ்ச
மானா விசைத்தமிழ்ப் பாநாலு முன்ற னடிக்கணிய
வானாலு நல்கிடவிநாசி வாழ்கரு ணாம்கையே. (9)

செந்நிறந் தோய்பவ ளக்குன்றனைய சிவபெருமான்
றன்னிற மங்கல நாணின் களத்திற் றரித்ததனா
னின்னிறங் கண்டத் தணித்தமையோர்கிலர் நீல்விடநல்
கன்னிற மென்ப ரவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (10)

காரண காரிய மியாவையுமாகிக் கடந்துணின்று
நாரண னுக்கொரு தங்கையு மாய்நிகழ் நாரணியே
பூரண வானந்த மெற்கீயி னின்புகழ் பொன்றிடுமோ
வாரண மேத்து மவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (11)

மலையத் துவச னிமவா னொடுதக்கன் வாரியுற்ற
வலையற்குஞ் சேயென வந்துறு நானிலம் வைத்தநின்று
டலையிற் பதிக்கவென் முன்வந்திலகிடிற் றாழ்வுறுமோ
வலைவற்ற சீர்நல் கவிநாசி வாழ்கரு ணாம்பிகையே: (12)

மறுகுற நிந்தை நுவல்வோன் றனக்கு மகளெனப்போ
யறுமதி யுண்டி யமைத்தாயுனையங்ங னேசிக்கிலேன்
சிறுபொழு தேயென்முன் வந்திட வேண்டினன் சிந்தைசெய்யா
யறுகணி வாரொடவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (13)

பூரணை யென்ன வமாவாசை தன்னைப் புகன்றிடவன்
மாரண மெய்தற் சகிக்கா தருளினவ் வாறளித்த
காரணி நீயடி யேற்கரு ளிற்றடை காண்பவரா
ராரணன் போற்று மவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (14)

வினையொன்று தாயரு மன்றோ தமக்கு விரோதமுற்ற
தனையன் றுயருறக் காணிற்ற முள்ளஞ் சகிக்கின்றிலா
ருனைநம்பு நாயடி யேன்றுக்க மிஞ்சியுயங்கனன்றோ
வனையென்றி யார்க்கு மவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (15)

புத்தனிச் சம்பொலி பூவினு மெத்தெனின் பொற்பதத்தைச்
சித்தந் துணிந்தம்மி மேல்வைத்த வந்தத்தினமுதற்கொல்
பித்தனென்றேயுல குள்ளார்க ளியாவரும் பேசிடும்பே
ரத்தனுக்குற்ற தவிணாசி வாழ்கரு ணாம்பிகையே. (16)

நிலவார் சடைபெறு நம்பெரு மாணினொர் நெஞ்சிலுண்டாம்
பலமார் சினத்தினுக் கஞ்சிக்கொலோவொரு பாவைதன்னை
வலமாவைக் காதற லாக்கித்தன் புன்சடை மாட்டுவைத்தா
னலவோவுரைத்தி யவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (17)

வேலியை நின்மகன் குஞ்சரியைக்கொள் விதமெனவே
மேலியை கங்கையை முன்வேட்டு வள்ளியின் மேவுமலை
நீலியெ னின்னைப் பின் வேட்டுறி லிச்செய னோர்ந்திருக்கா
தாலியை வோனுக் கவிநாசி வாழ்கருணாம்பிகையே. (18)

குருவாகித் தாரகத் தின்பொரு ளீதெனக் கூறுசெவ்வேள்
பொருவா மெஞ் ஞானப் பொருளொன்றை யோதிப் புவிநடையின்
மருவா சிரம வகையுணர்த் தாமையின் வந்ததந்தோ
வருவா மவற்கிஃ தவநாசி வாழ்கரு ணாம்பிகையே. (19)

இகலிடந் தன்படை தன்னையெக் காலு மெறிதலின்றிப்
புகலிட மாயெவர்க் குந்நின்ற பூரணன் பொன்வடிவிற்
பகலிட நீகொண் டிலங்கிட வன்னவன் பாதியுரு
வகலிட மோதி யவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (20)

நலப்பாக மென்கை வலப்பாக மென்பர்க ணன்குணர்ந்தோர்
கலப்பாக நின்னிடப் பாகங்கொண் டான் கண்டுங்கண்ணுதலோன்
வலப்பாகத் தைப்பெறு மாட்சிதற் கின்றென் மருட்சிகொடோ
வலப்பாகங் கொண்ட தவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (21)

அஞ்சினை மீன்மக ரங்கொண்ட கீரவம் போதியிலார்
நஞ்சினை யஞ்சிய தேவருய் வானுயர் நாதனுண்கான்
மஞ்சினை நோரக் கன்வரை தூக்கிய வைகலென்ன
வஞ்சினையேகொ லவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (22)

குன்று விறலறக் கன்கயி லாயக் குலவரையைத்
தன்றூழ்வி லாண்மையிற் றூக்கிடிற் சங்கரன் றன்னுடனே
யொன்றும் வடிவுற் றிருந்தனை யேலென் னுஞற்றிடுவா
யன்று ரணிசொலவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (23)

நகமுற் றவன்புவி சூழ்ந்தெய் திடுமுன நான்றிடுங்கை
முகமுற்ற சேய னுமைச்சூழ்ந் தினிமை முதிரப்பெற்ற
சுகமுற்ற தாங்கனி பெற்றன ஞலத் துணையிலுன்ற
னகமுற்ற தார்க ணவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (24)

அளித்திட்ட தந்தைக்கு மூத்தவன் மீது மலகிலன்பிற்
குளித்திட்ட தாய்க்கிளஞ் சேய்மீது மார்வங் குலவுமென்பர்
தெளித்திட் டனனதை நம்பெரு மானீ சிறுமகனுக்
களித்திட்ட தென்கொ லவிநாசி வாழ்மரு ணாம்பிகையே. (25)

பார்மீது கொண்ட வழக்கிஃ துன்னுளப் பாங்கரந்தக்
கார்மீது கொண்ட மதஞ்சால் கயானனன் கண்கொல்வென்றிச்
சூர்மீது போர்க்கெழுந் திட்டவை வேற்கைச் சுதனிடங்கொ
லார்மீதி மலார்வவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (26)

உலகக் கொடுநடை மெய்யென நாடி யெனுள்ளமநோ
கலகப் புலனிற் கவிழ்கின்ற தாலிதைக் கட்டிடுமோர்
வலிமற் றமையும் வழிதெரியாது மயக்கமிஞ்சி
யலமிக் கடைந்தே னவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (67)

சுட்டை யொழிந்த சுகாதீத ஞானச் சொருபவுருத்
தொட்டைய மாதிய வாந்தொடர் யாவையுஞ் சுட்டொழித்து
நிட்டையி லேய்ந்திடு மாறெந்த நாளினிறுத் துவையோ
வட்டை வரையு மவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (68)

சேம மிக்குந்துன் றிருப்பத பங்கயஞ் சேர்ந்திடுவான்
போமனத் தூடு மடவார்க ளாசை பொருத்துமிகற்
காமனுக் குஞ்சிலை யீந்தாயென் மட்டிற் கருணையின்றோ
வாமனத் தின்க ணவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (69)

நோய்வேண் டிடும்பொரு ளானாலு முள்ளத்தி னோக்கியுற்ற
சேய்வேண் டிடினுடன் றந்திடு வார்செகத் தன்னையரென்
னாய்வேண்டிக் கேட்பது மற்றொன்று மன்றுநற் றாளினன்பே
யாய்வேண்டி நல்கி டவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (70)

கின்னஞ் சுமக்க வரும்பஞ்சு பூதக் கிறியுடலை
யின்னஞ் சுமக்கவி டாதே யடைக்கல மியானடியேன்
மன்னஞ் சுமக்கு மலரடி சேர்த்துதி வாரிசங்க
ளன்னஞ் சுமக்கு மவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (71)

சேயேயென் யான்மிகு சேயே னெனினுந் திருவருடோய்
தாயே யெனநிற்பை தாயேநிற் பாய்சா ணந்தமியேன்
மாயேய வாழ்வின் மயங்காது மாயே சுவரியென்னு
மாயே யளித்தி யவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (72)

ஓவருங் குற்றங்கள் பற்பல கோடி யுஞற்றினுநின்
பூவருந் தாட்டுணை யேசேர விச்சையும் பூண்டுளனா
னீவருந் தப்புரிந் தாலுமல் லாதரு ணோர்ந்திடினு
யாவருஞ் சேய்கா ணவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (73)

பூணேய மங்கையர் பானேயங் கொண்டு புழுங்குதற்கோ
ராணே யெனப்பிறந் திட்டதல் லாலிவ் வவயவஞ்சான்
மாணேயங் கொண்டவர் நற்செய லொன்றும் வயக்கிலன்னுன்
னாணேயம் வைத்தா ளவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (74)

தோற்றித்திக் கேயிரை தேடிநொந் தேங்கவித் தொல்லுலகிற்
றோற்றித்திக் கேது மறியாம லேபுலத் துட்டருக்குத்
தோற்றித்திக் கேழொடொன் றும்வசை தோயெனைத் தொண்டனென
வாற்றிச் சற்றாடி யவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (75)

மண்ணாசை யோடுறு பொன்னாசை நெஞ்சை மயக்கிடுமோர்
பெண்ணாசை கொண்டு திரிந்ததல் லாமலுன் பெய்மலர்த்தா
ளெண்ணாசை சற்றறி யேனையுன் றொண்ட னெனப்புரிந்து
ளண்ணாசை தீர்த்தி யவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (76)

25
...நாடு ஆவணக் காப்பக...
சென்னை 600 008
183868

செய்யும் யவையில தென் றமி பாரா' றகைக் காமிக
கையுந் தகைய னெனையாள வென்றெதிர் நண்ணியருள்
பெய்யும் படிநினைக் கிற்றடுப் பாரெவர் பேசுகண்டா
யையுந் தியசீ ரவிநாசி வாழ்கரு ணம்பிகையே. (77)

குருவாகி நீயடி யேற்குமுன் வந்து குறித்துணர்த்துஞ்
சொருபாது பூதி விளக்கமெங் நாளினிற் றேற்றவைப்பாய்
பொருவா ரிதியுடைப் பூவா ருயிர்வான் புகுந்திடச்செ
யருண டகர்கொ ளவிநாசி வாழ்கரு ணம்பிகையே. (78)

பொய்யிடைப் பட்டவென் புன்புல னுங்கொடும் பூழியுட்பட்
டையிடைப் பட்டயரீப்போல நொந்திங் கழுந்தெனையாண்
மெய்யிடைப் பட்டதொண் டன்பினர் தங்கண் விருந்தெனவே
யையிடத் தோங்க வவிநாசி வாழ்கரு ணம்பிகையே. (79)

கணிகைய ரிற்றொறு மின்பமொண் டுண்டு கடைப்படுமோர்
பிணியியன் மத்தளி கற்குந் திருவருட் பேறளித்தாய்
தணிவரு நின்புகழ் பாடிடுவேற்குளந் தங்கியவா
றணியரு ளாதெ னவிநாசி வாழ்கரு ணம்பிகையே. (80)

விதிதன் கரங்கொண் டெழுதிய தாமவ் விதிவழியே
மதிகுன்றிச் சென்றுழல் வேற்குநின் பொற்றுணை வான்மலர்த்தாட்
பதிகொண்ட தொண்டர் கதிகொண்ட வாழ்வென்று பாலிப்பையோ
வதிகங் கொள்சீர்த்தி யவிநாசி வாழ்கரு ணம்பிகையே. (81)

நானில மேலமை மேலோர் தமக்கு நகைவரவோ
கானிட மார்புள் விலங்கினு மேகடைப் பட்டவெனை
மானிட னுகப் பிறப்பித் தனையொத்த மாணருளா
யானிடத் தாரோ டவிநாசி வாழ்கரு ணம்பிகையே. (82)

துன்பொன் றகிலச் சுடுசுரத் தாடுட் டுடித்தயர்வேன்
முன்பொன்ற நின்பெருங் காட்சிதந் தின்றெனை மூடுமுட
லென்பொன் றறவுரு கும்படி யென்ற னிருதயத்து
னன்பொன் றருடி யவிநாசி வாழ்கரு ணம்பிகையே. (83)

இருந்தமிழ் மாற்றம் பகர்வண்ண மிக்க விளங்குருந்தை
யருத்தமிழ் வெங்குண மேவுங் கராவு மமருண் ணுந்
திருந்தமிழ் தன்னகர் நாவலர் கோனன்பிற் செப்பினிய
வருந்தமிழ் கொண்ட வவிநாசி வாழ்கரு ணம்பிகையே. (84)

நாயடி யேனெனை யாட்கொள்ள வெய்திலுன் ணுண்மலர்ப்பொற்
சேயபொற் பாதஞ் சிவக்குமென் றச்சஞ் செனிக்கிலுன்ற
ணுயக னுற்றுள் ளேவிடக் கூசிலுன் னந்தனருண்
டாயவற் கோதி யவிநாசி வாழ்கரு ணம்பிகையே. (85)

சிங்கஞ் சுமக்க வருநின்ன தாரணந் தேடரிய
வங்கஞ் சமொக்குந் திருத்துணைத் தாட்கன்பிலா தவர்தாம்
பங்கஞ் சுமக்க வரும்பஞ்ச பூதப் பலம்பொறுத்த
வங்கஞ் சுமந்தெ னவிநாசி வாழ்கரு ணம்பிகையே. (86)

செங்கோ கனகத் திருமாது நான்முகன் றேவியெனும்
பொங்கோகை நாமக ளுந்தவமேது புரிந்தனர்கொல்
பைங்கோ மளம்பெறு நின்னரு ளார்பணி பண்ணியுன்ற
னங்கோலங் காண்பா னவிநாசி வாழ்கரு ணம்பிகையே. (87)

நாறிடு முன்று மறைப்பத முள்ளத்தி னுடிலின்ப
மூறிடு கின்ற தெனக்கே யெனிலுளத் தூடன்பினுற்
கோறிடுந் தொண்டர்கள் கொண்டிடு மோரின்பங் கூறுவதோ
வாறியல் வோர்கொ ளவிநாசி வாழ்கரு ணம்பிகையே. (88)

கொன்னே யுலகக் கொடுநெறி யூடுழல் கோதுளத்தே
னின்னேயப் பாத நினைத்திடிலின்ப நிறைகின்றதா
லென்னேநின் பாதத்தி னீவைத்து ளாயதை யானுணர்வா
னன்னே பகர்தி யவிநாசி வாழ்கரு ணம்பிகையே. (89)

கருமேனி கொள்பவர் காணுநின் றெய்வக் கமழ்விசையுந்
திருமேனி கொண்டிய வின்பினைத் தம்முளந் தேர்ந்தலவோ
விருமேனி தம்மை யொருமேனி யாக விசையக்கொண்டா
ருமேனி கொண்டா ரவிநாசி வாழ்கரு ணம்பிகையே. (90)

பொற்பமை வுற்றநின் மேனியை யுள்ளம் பொறித்துக்கொலோ
சிற்பா னென்றொரு பேர்வாய்ந் தனனரன் செம்பொன்முடி
வெற்பரை யன்புரி யுந்தவ மாகுமோர் மேனிகொள்வா
யற்பமை தொண்ட ரவிநாசி வாழ்கரு ணம்பிகையே. (91)

வாக்குன் றிருப்புக ழேபாட வென்றன் மனநினைய
நோக்குன் றுணையடி நோக்கச் செவிசொ னுகரவென்றன்
மூக்குன் மணங்கொள மெய்யுன் பரிசத்தின் மூழ்கவுமே
யாக்குன் பரங்கா ணவிநாசி வாழ்கரு ணம்பிகையே. (92)

நின்னடிக் கன்பில னுயினு நின்புடை நேர்ந்திடுவா
னுன்னடி யேனென தெண்ணமுற் றாக வுதவியென்றும்
பொன்னடி மைப்படும் புல்லரை யோர்பொரு ளாமதியா
வந்நல மீந்தா ளவிநாசி வாழ்கரு ணம்பிகையே. (93)

பாடிடுந் தோறும் பரானந்த வின்பம் பரவிநெஞ்சை
மூடிடு நின்பெருஞ் சீர்பா டிடுஞ்செயன் மோசியிடு
காடிடு வார்தமைப் பாடிடு வார்கங்கை விட்டங்கண
மாடிடு வார்க ளவிநாசி வாழ்கரு ணம்பிகையே. (94)

மலைவாயி லார்புகழ்ந் தேத்துநின் சீலம் வழித்துமொப்பில்
கலைவாயி லாமதி யீனரன் றேவிந்தக் காசினிக்கட்
புலைவாயி லாவன வெங்குண் டங்கங்கு புகுந்துபுகுந்
தலைவாயி லாதோ ரவிநாசி வாழ்கரு ணம்பிகையே. (95)

எந்தப் பொழுதி லெனைக்கொண் டெதுசெய வெண்ணினைகொ
லந்தப் பொழுதி லதைப்புரி கின்றதை யன்றியெற்கோர்
சொந்தச் செயலின் றெனுமுண்மை தன்னைத் துணிந்தறிந்தே
னந்தப் படச்செ யவிநாசி வாழ்கரு ணம்பிகையே. (96)

கருநாட மன்னனு ணீயிருந் தன்று கழறியவோர்
தருநாடர் தேர்வரி தாம்புகழ்ச் சீர்ச்சுத்த சாதகத்திற்
கருநா டமைதலி லாவருண் மேனி கவின்றுனற்றா
ளருணா டுறச்செ யவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (97)

சரணஞ் சரணத் துணைகட்கி யானெனற் றாயெனைநீ
கரணங்க ளியாவுங் கடந்தோ ரறிவினிற் காண்டருமோர்
மரணம் பிறப்பற் றியன்மெய்த்த சுத்தசன் மார்க்கமுய்த்தா
ளரணம் பொலிசீ ரவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (98)

படைக்கல மேந்திந் திரன்வாழ்வும் வேண்டிலன் பஞ்சபுல
நடைக்கல மந்தனன் றாயேநின் கட்கடை நாடிநின்றா
ளிடைக்கலக் கும்படி செய்துனை வேறின் றியானினக்கே
யடைக்கல மானே னவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (99)

குற்றஞ் செயலென் குணமெனி லாமெனக் கொண்ணருண்டாற்
செற்றஞ் செயலுனக் கேற்றதென் றார்நிற்குச் செப்புநரே
நிற்றஞ்ச மென்றடை வேன்வினை நீயன்றி நீக்குநர்யா
ரற்றஞ் செயரு ளவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (100)

பொன்னே மணியே யருள்வாரி வாரிப் பொழிபுயனோர்
மின்னே பரம னுளமுருக் குஞ்சொல் வியன்கிளியே
மன்னே மரகத மேயொப்பி லாவருண் மாணிக்கமே
யன்னே யபய மவிநாசி வாழ்கரு ணாம்பிகையே. (101)

முற்றிற்று

கருணாம்பிகை திருவடிகளே துணை.

உ

குருவே துணை

# கருணாம் பிகை யமக வந்தாதி

## காப்பு.

கருணும் பிகைய மகவாகச் செய்து கலக்குமலக்
கருணும் பிகைய மகத்துவஞ் சால்பொற் றுணையாங்
கருணும் பிகைய மகமூ டளித்துக் கடைக்கணித்தாள
கருணும் பிகைய மகவந்தா திக்கைங் கான்றுணையே.

## நூல்.

அவிஞசி யப்பரி யில்வாழ்த்தப் புக்கொளி யாந்தலத்தே
அவிஞசி யப்பரி யானம்பி லென்றரி யைக்கொளுஞ்சீர்
அவிஞசி யப்பரி டம்வல மாக வமர்ந்தருளும்
அவிஞசி யப்பரி யாருமை யேகரு ணம்பிகையே. (1)

கையகத் தாக்கந்தனக்காக வீனக் கயவரைக்காக்
கையகத் தாக்கந்தர்ப் பாதன்ம மேகவா காவெனக்காக்
கையகத் தாக்கந்தகர்புக் கொளிக்கரு ணம்பிகைதாட்
கையகத் தாக்கந் தஞ் சேர்க்குதி ருண்மைக் கதியுமுண்டே. (2)

கதிக்கட்டடங் தங்கதித் தச்சட லத்தின் கணக்கொடிச்ச
கதிக்கட்டடங் தங்கடக் கும்பெரு வன்மையுங் காணிமூல
கதிக்கட்டடங் தங்க வுலகியல் புங்கரு ணம்பிகைதாட்
கதிக்கட்டடங் தங்கண் விளங்குங்கை யாமல கத்தினன்றே. (3)

கத்துந் திரைக்கணஞ் சூழ்கடற் பாரொடு காந்தியாங்
கத்துந் திரைக்கமஞ் சேர்வார்த் திகங்கண்டுங் காதல்கைம்மி
கத்துந் திரைக்கலேந் தாய்புக் கொளிக்கரு ணம்பிகைய
கத்துந் திரைக்கவின் காணுதி யின்பக் கணம்வருமே. (4)

கணங்கொண் டலமரு துன்பநெஞ்சீது கடைப்பிடியாய்
கணங்கொண் டலடிப்ப ரென்றுடி யன்றெனிற் கள்வனசக்
கணங்கொண் டலனமெய் யன்றங்கை யென்கருணம்பிகையாக
கணங்கொண் டலத்தமை யுங்கதி நாமின்று கைக்கொளவே. (5)

கைக்குஞ் சரமங் களமெய்யன் காண்பறக் காமனுக்கு
கைக்குஞ் சரமங் களலரிக் கீகரு ணம்பிகையைக்
கைக்குஞ் சரமங் களபத்தொ டார்தெருக் கண்ணெழிலார்
கைக்குஞ் சரமங் களகண்ணர் புக்கொளிக் கண்டிறைஞ்சே. (6)

கண்டனங் கம்பு மொழிநடை கந்தாக் கன்னியரைக்
கண்டனங் கம்பு துளைக்கநெஞ் சேங்கிடு காமுகர்மைக்
கண்டனங் கம்புன் சடையவிநாசி கவின்றவப்பர்
கண்டனங் கம்புண ருங்கரு ணம்பிகைக் கண்ணிலரே. (7)

கண்ணற் றுணங்கற லார்கடத் தாவிடைக் கட்செவியாக்
கண்ணற் றுணங்க விடுத்தரு ளுங்கரு ணம்பிகை நிற்
கண்ணற் றுணங்க முடையாரிற் கூட்டிடல் காதலன்பர்
கண்ணற் றுணங்கறல் கண்டின்ப மெய்தக் கடைக்கணியே. (8)

கடைப்பட விப்பிர பஞ்சமெய் யென்று களித்திடுஞ்ச
கடைப்பட விப்பிர வாழ்வையெண் ணேலது கன்னியர்சாக்
கடைப்பட விப்பிர விற்றள்ளு நங்கரு ணம்பிகைதாட்
கடைப்பட விப்பிர வாசங்[illegible]ன்பக கடலதுவே. (9)

கடத்தினைக் காவல் புரிவா டொழுங்கரு ணம்பிகைசங்
கடத்தினைக் காவல் லபங்காட்ட வைவர் கலக்கமுற்றேன்
கடத்தினைக் காவல் லபத்தொழில் யாவையுங் கட்டொடறக்
கடத்தினைக் காவல் லவர்சேர் பெருநிலை காட்டியின்றே. (10)

காட்டிற் றிகைப்பர வும்புக் கொளிக்கரு ணம்பிகையே
காட்டிற் றிகைப்படத் தேடியெங் நாளுமிக் காசினிக்கட்
காட்டிற்றி கைப்பமை புள்விலங் கேய்வன் கருத்தமைந்து
காட்டிற்றி கைப்பற் றளவாச் சிகமுட்கலக்க வின்றே. (11)

கலக்க மலக்கங் குலுட்டுகளை வேன்கொள் கவலைகண்மி
கலக்க மலக்கங் குகரையில் லாகருணம்பிகை நின்
கலக்க மலக்கங் குலவின்பசாகரக் காற்றுணையிற்
கலக்க மலக்ங் குறுகிட வற்றிடக் காதரமே. (12)

காதா மங்கள வற்றவை கொள்பவர் கன்னியர்கண்
காதா மங்க ளலரேயென் பார்கருணம்பிகைசு
காதா மங்கள கௌசிகப் புக்கொளிக் காமர்சொல்வோர்
காதா மங்கள மாமலர் மெய்க்கதி க்காண்பவரே. (13)

காண்பரி மேதமுலாகச் சொல்லும கத்தினமொன்
காண்பரி மேத ரசமா மாதர் கலப்பன்றியென்
காண்பரி மேதரி புக்கொளிவாழ் கருணம்பிகைநிற்
காண்பரி மேதகை நெஞ்சின ரேய்வர் கனசுகமே. (14)

கனவான வம்புவி யிற்சுக மேதந்தக் கற்பகந்தோய்
கனவான வம்புணர்ந் தெய்த்தேங்கக் காதை கரையிலவேற்
கனவான வம்புப் பொழிற்புக் கொளிக்கரு ணம்பிகைபொற்
கனவான வம்புயத் தாள்விட்டின்பேது கருதிடினே. (15)

கருதா ரரணமட் டார்மெத்த வாசங் கமழ்ந்திடும
கருதா ரரணட் டார்மங் கலப்புக் கொளிக்கவின
கருதார ரணமாட் டார்குந்தளக் கருணம்பிகைதாட்
கருதார ரணமாட்டா மெய்விதிதன் காப்படைப்பே. (16)

காரங்கந் தாங்குழல் கண்குழன் மாற்றமங் கன்னியர்தங்
காரங்கந் தாங்குழல் காந்தள் கம்பம்மெனுங் காமவந்த
காரங்கந் தாங்குழல் வார்கரு ணம்பிகை காற்றுணை நு
காரங்கந் தாங்குழல் வாய்தீர் சுகக்கதிக் கண்ணியரே (17)

கண்ணியக் கந்தர மால்போற்று யாதி கருத்தர்பிறைக்
கண்ணியக் கந்தர மால்விடத் தார்பெறக் காதல்வலக்
கண்ணியக் கந்தர மால்வடி வக்கரு ணம்பிகைதாட்
கண்ணியக் கந்தர மால்போல நெஞ்சே கரையவென்பே (18)

கரையத்தி யங்கண்ட ர்க்காக்கயி லாயவங் கட்புகுமிக்
கரையத்தி யங்கண்ட னிற்றீய்ப்பர் தோய்கரு ணம்பிகைமுற்
கரையத்தி யங்கண்ட தும்பநின் றேத்திடுங் காதலரில்
கரையத்தி யங்கண்ட ருஞ்சுக மேய்வர்மெய் காண்டி நெஞ்சமே (19)

காண்டந் தரிக்குஞ் சடையார்தன் புக்கொளிக் கண்டளிதென்
காண்டந் தரிக்கு நிகரிட்டிடைக்கரு ணம்பிகையைக்
காண்டந் தரிக்கு ளகுறையை யோதிற் கணத்திலெதிர்
காண்டந் தரிக்குக் கடம்பனிலின் பங்கலக்கு நெஞ்சே (20)

கலவா வத்தந் தழைசடைப் புக்கொளிக் கண்ணுதலார்
கலவா வத்தந் தயங்காழி தோய்கரு ணம்பிகைப்பு
கலவா வத்தந்த மெய்தார்விண் வாணர் கனிதுநிபு
கலவா வத்தந்த மெய்தேர்ந் தொடுக்குவர் காயத்தையே (21)

காயம லக்கடந் தன்னைநம் பேலுட் கருத்தமமோ
காயம லக்கடந் தத்ததென் றன்பர்கழறியுந்தீங்
காயம லக்கடந் தட்டுகி லேற்கரு ணம்பிகையா
காயம லக்கடந் தப்புறமாம் பதக் கண்ணருளே (22)

கண்ணமை யத்திருக் காட்சிக் கொலைவர்க் கடக்கநுதற்
கண்ணமை யத்திருக் காட்சிய தாகக் கவின்றிடற்போற்
கண்ணமை யத்திருக் காட்சிக்கெட் டாக்கரு ணம்பிகையென்
கண்ணமை யத்திருக் காட்சிதந் தோட்டுளக் கங்குலையே (23)

கங்கண மாசுணங் கற்கிடுங் கான்சுடு காட்டிடுமங்
கங்கண மாசுண மாகுநெஞ் சீது கருதலைநீ
கங்கண மாசுணத் தார்புக் கொளிக் கருணம்பிகை துங்
கங்கண மாசுணங் கம்பெற்றியனு மோகாரமன்றே (24)

காரண காரிய மேசுக மென்னக் கருதுநெஞ்சே
காரண காரியல் வாகனன் போற்றிடுங் கண்ணியமார்
காரண காரிய மீதாகு மன்பிற் கருதெதெனிற்
காரண காரிய மாங்கரு ணம்பிகை காற்பணியே (25)

காலம் பாம்புரை கண்மாதர் வாஞ்சை கதித்தநெஞ்சே
காலம் பாம்புகண் ணெய்தநிற் கொண்டுசெல் காலத்தின்மின்
காலம் பாம்புனை யுங்கரு ணம்பிகை கஞ்சமலர்க்
காலம் பாம்புக லல்லாதி யார்புவிக் கட்டுணையே (26)

கட்டுண்டங் காட்டி மயக்குமின் னாரொடுங் காதலின்மேற்
கட்டுண்டங் காட்டி னுளங்களிப் பீர்கரு ணாம்பிகையின்
கட்டுண்டங் காட்டி லடிபோற்று மன்பர் கணத்தினிலே
கட்டுண்டங் காட்டி லமைந்திடு மோமெய்ச்சு கம்வரவே (27)

கம்பர வம்பணி கற்புலத் தானுட் கலங்கிடுவேற்
கம்பர வம்பணி புக்கொளி நாயகற் காதல்செய்யுங்
கம்பர வம்பணி வாய்ந்த பெருங்கரு ணாம்பிகைதாட்
கம்பர வம்பணித்தொண்ட னென்றுளலக் கண்டவிர்த்தே (28)

கண்டங் கருத்தமை யன்னவர் கண்ணுவர் காணமறைக்
கண்டங் கருத்தமை யந்திரச் சாற்றினர் காதுறச்சொற்
கண்டங் கருத்தமை யங்கரு ணாம்பிகை காற்றுணைய
கண்டங் கருத்தமை யன்பர்க்கு முத்திகைக் கட்கனியே (29)

கட்கந்த வம்புறழ் கண்ணுடை யார்தங் கருப்பவலைக்
கட்கந்த வம்புடைக் கும்புக் கொளிக்கரு ணாம்பிகைதன்
கட்கந்த வம்புய மானும் பரிபுரக் காமரடி
கட்கந்த வம்பு மலர்தூவி யேத்தவி காரவன்பே (30)

—:: முற்றிற்று. ::—

ஸ்ரீ பெருங்கரு ணாம்பிகை திருவடிகளே சரணம்.

உ

தேவிசகாயம்.

# கருணாம்பிகை திருப்புகழ்ப்பஞ்சகம்.

தத்ததன தனதான — தானதானா

மட்டுலவு மலர்மாலை யுற்ற குழ லொடுதாவு
    மைக்கணில கிடமேவு — மடமானார்
மற்றெவர்க ளையுமேநி னொப்பில்வடி வெனவேயுண்
    மைப்படவென் மனதூடு — கருதேனோ
அட்டுயிரை நிணமேதை கொட்டுமக டுறுபாவ
    ரற்றவர்கள் குலமோடு — தொலையாரோ
அப்பருட னொருநீயென் மைக்குலவு மனமேவி
    யர்ச்சனைக்கொ டருளீய — நினையாயோ
எட்டியல்கை யினனாகு லப்பாவையிடைமூழ்க
    வெற்றுகரமுறு மாறு — முகவோனீ
ளெற்குலவு கரமீத யிற்படைய தெனமேவி
    யிற்றெழிய வசுராளி — யடுதாயே
அட்டதிசை யினும்வீசி சைக்கிரண மிகுஞான
    வர்க்கனென வெனையாளொர் — குருவாவாய்
யற்றமில்பல் வளநீடு புக்கொளியிலவிநாசி
    யப்பரிட முறமேவு — பெரியாளே (1)

தனதனனா தத்த தானன — தனதானா

அதிர்கடல்சூ ழுற்ற பாரிடை
    பலபலகோ டிக்கு மேலெனு
    மனையர்கள்பான் மெத்த வார்வமொ — டிருளேதோ
யணிமுலையூ டுற்ற பாவினை
    நுகர்தரலான் மொய்த்த தீவினை
    யநுசிததோ டக்கு ழாமுழு — தறுமாறே
முதிராருண்மே னிப்பு ராரித
    னுரமிசைதோய் வுற்ற தானநின்
    முருகவிர்ஞா னக்கு யாசல — வினையார்பான்
முருகனைநேர் பொற்பு மாதவர்
    நுகர்தருமா றற்பி னோடருண்
    முறைமையிலே ழைக்கு மோர்சிறி — தருள்வாயே
மதிபுனைவா ருட்கு லாவிய
    புலவியைமா றச்செய் வானணி
    மலரடிதாழ் பத்த ராசைகண் — முழுதீவாய்

மலியிருணு ளிற்ப ராவிய
லடியவன்வா ழக்க லாமதி
வரவருண்ஞா னச்சொ ரூபமெய் தியதாயே
திதிபுரிவான் மக்க ளோடெம
ளிவர்தொழின்மா றக்க ணைடிடு
திருவருணீ டுற்றவாரிய னுருவாவாய்
செழுமதிதோ யொப்பில் கோபுர
மானுருவே பெற்ற நீடிய
திருவவிகா சிக்கண் மேவிய பெரியானே. (2)

தனத்தத்தன தான தானன தனதான

மதித்தற்கரி தாக மாயைசெய்
துயர்க்குப்பைகள் யாவும் யானிவண்
வகுத்துச்சொல வேணுமோவென துளமாமோர்
வனப்புற்றவிர் கோவி லூடொரு
கணத்தப்புற மோவி டாதகின்
மனத்துக்கறி யாதவோர்செய லுளதேயோ
சுதற்குத்தெரி யாமலே பொரு
ளொளித்துத்தரு தாயர் மேவிய
துறைக் கொத்திட வாடு ணைதரு டெரிவேனீ
டுயர்க்கப்பலை நேர்பொய் மாயவி
[illegible]ற்பட்டது போது மாலுனோர்
சுகப்பொற்கழல் வீடு கூடிட வருள்வாயே
சதிப்புத்திகொ டைய பாவியர்
மனத்திற்றிமி ரார மாவசி
தனைச்சித்தமெ ணைது பூணை யெனலாலே
சலக்கொற்றவ ணணை யாலுயிர்
துறக்கப்புகு வாமுன் ணைய்மதி
தழைக்கப்புரி நீடுபேரருள் வடிவாவாய்
திதிப்பட்டுயிர் போய்மி ணர்கர
மகப்பட்டுழல் வேன்மெய் தேரவொர்
சிறப்புற்றமெ ஞான தேசிக வடிவாவாய்
சிரித்துப்புற நீற நாடினர்
வலத்திற்கனி வோடு சேர்திகழ்
திருப்புக் கொளி யூரின் மேவிய பெரியானே (3)

தத்தன தானன தான தானன தனதான

பற்பல கோடிய வான வாருயர்
கட்கிட மாகிய வூனை யேதமொர்
பட்சண மாநக ரீம நோக டிறந்தியோர்
பட்டுடை மாடைகன் மேவு பூணின
மிட்டலை யார்மு கிரேயு மாறுயர்
பத்திகு லாமணி மாட மீதுள மகிழ்வோடே

வெற்பன வாணவ ராக நாடொறு
நிற்பணி வாரவ ரேச லானுளம்
வெட்குபு வாடிடு நீர்மை நீதியின் முறைதானே
விற்பன நீள்பர ஞான பூரண
சித்தநு பூதிகு லாவு மோவருள்
வித்தக ளுளிதின் மேவு மாறருள் புரிவாயே
சிற்பர்க ளாலெழு தாதபேருரு
வற்புத மார்குயி லேயெ னுதா
சித்தமு லாமயி லேயெ னுவரா னுவல்பாவாய்
சிற்றிடை யார்புடை சூழ வேபசு
மைக்கிளி வாகன மீது லாமிர
திக்கொரு நாயகன் வாகை மேவவில் கணையீவாய்
பொற்பண மேபொரு ளாக நாடிய
வத்தலை வேனெனை மேன்மை தோய்தவர்
புக்கவொர் சூழலின் மேவு மாறருள் குருவாவாய்
பொய்ப்புவி மாலறு சீல மாதவ
ரற்புட னேவழி பாடு காணிய
புக்கொளி யூரவி நாசி மேவிய பெரியாளே (4)

தனதன தாந்தனத் தனதானன தனதான

இருந்திரை மேய்ந்துவிட் புலமாடதிர்
கரும்புயல் போன்றளிக் குலமோவற
விசைந்திடு பூந்தொடைக் கவினீடிய குழலோடே
இமம்பொழி சாந்தனைத் திடுவாண்முக
மிலங்கெழி லீர்ஞ்செவிக் குழைதாவுக
ணிளங்கதிர் கான்றவற் புதமேவுபு னகைவாய்நீள்
கரும்பலர் பூங்கணைத் திரளாதிய
புனைந்தவிர் நான்குகைத் தல மாரொலி
கலந்தமை காந்திமிக் குறுமேகலை யொடுமேலோர்
கணங்களை மாந்துபொற் புறுநூபுரம்
வயங்கெழின் மாண்பதத் துணையாதிய
கவின்றெனுள் வாழ்ந்தருட் கதியீயவு ணினைவாயே
பொருந்திற வீர்ங்கரக் கரியீருரி
யணிந்திடு தாண்டவப் பெருமான்மயல்
புணர்ந்திடு வேன்கொளற் புதமாருரு வுடையாளே
பொலங்கிரி வேந்தனுக் கியலேழ்கடல்
குடைந்திடு பாண்டியற் கொழியாவிசை
பொருந்திட வாய்ந்தபுத் திரியாவரு மறையீறாய்
பிருந்தை கொள்வான் புயத்து றுவாண்மரு
கியுந்தினம் வாஞ்சையிற் புனைபேரெழில்
பிறங்கிய காங்கையொத் தவிர்மேனிகொண் மலைமானே
பிறந்திடன் மாய்ந்திடற் குளமேல்வெரு
ளமைந்தவர் வேண்டுபுக் கொளியூரிடை
பெருங்கரு ணம்பிகைப் பெயர்மேயமர் பெரியாளே (5)

ஸ்ரீ பெருங்கருணம்பிகை துணை.

உ

கணபதி துணை.

# விநாயகர் திருப்புகழ்.

*தனத்தனத்தனதாத் தனதன தானன தனதானா*

கருப்புச்சிலை கோட் டுபுமத நாமவெவார்
பயற்புத் தலர் தூய்ப் பொருசெயலாலுறு
கருத்துப் பறிபோய்த் துயர்மிகவேதிரி விதமேயார்
கடத்தைப் பொழிபூட் கையினிரு கோடென
மதர்த்துப் பணிபூட் டியமட வார்முலை
களைப்பொற் புரமேற் படவணை வானுள மிசையோவா
விருப்புற் றலைதூர்த் தகுணமு லாயவ
ருளத்திச் சையினுட் டுறுபல பாவவல்
வினைக்குட் சுழனுய்க் கிணைபடு வேனல முறுமாறே
விரைப்பொற் பிருதாட் கமலமெ னோர்முடி
யிருத்திப் பிறவாக் கதியெனு நீளருள்
வெளிச்சத் தியல்வீட் டிடைகுடி யாகிட வருள்வாயே
மருக்கட் பொழிபூத் திரணிறை காவியல்
வளப்பச் சவுராட் டிரமெனு நாடதை
வயக்கப் படவாட் சிசெய்மக ராசன துடலேதோய்
வனப்புக் கெடவாட் டிடுதொழு நோய்முழு
தகற்றிப் பெரியோர்க் கிடமென நீடுகின்
மயப்பொற் பமைமாட் சிமையுல கூடுற வருளீவாய்
தெருட்சித் தமிலாச் சிறியவ ரேயுற
வெனப்பொய்ப் புவிவாழ்க் கையிலுழல் வேனருள்
செழிக்கத் தவமேற் றவரிடை வாழ்வுற வருளீவாய்
திருக்குத் தெவிட்டாப் பலபல கோடிய
சிறப்புற் றவிர்காட் சிகண்மிக நீடிய
திருப்புக் கொளியூர்த் தளியினி லாவிய பெருமானே

## சுப்பிரமண்யர் திருப்புகழ்.

தனதன தானத் தானன தானன தனதான

சலதியின் மூழ்கிச் சீகரம் வாருபு
மிசையெழு மேகப் பான்மைகு லாவிய
தகரவி லோதப் பாவையார் மூடிய குவடநேர்
தனமிசை யாவற் கூடியெ நோமு
மயல்பிரி யாமற் பேயில னூர்கண்மெய்
தழுவும்வி னேதக் காமுகனு யுயிர் தொலையாதே
அலகரும் வேதத்தோதரி தாகுமின்
விமலசு கோதச் சாகர மாயவி
ரடியிணை யோர்சற் றுயினு மேயுள மகலாதே
யமைவுற நாடித் தேவர்க ளாரமு
தெனவரு பூதிப் பாடல்பல் கோடியு
னணியுர மீதிற் சூடிடு மாறருள் புரிவாயே
குலவரை யாவற் றூடும் விராவிய
வடிமலர் நாடற் பாளரு ணீடிய
குறுமுனி வோனைப் பார்பிலை தோய்தர வருளீவாய்
குகுகுகு கூகுக் கூவென வேவரை
முழுவது மேபக் காகிடு மாறதிர்
கொடிபுனை தோண்மற் றோர்புற மேவிய கிளியோனே
திலகவி நோதப் பாவையர் மாயையி
னிடைபடு தீமைப் பாவமு ரூதுயர்
திருவடி நாடற் பாளருண் மேவல்செய் குருநாதா
தெருவிடை யாரத் தோடகி லார்புகை
கமழும்வி ழாவெப் போதினு மோவரு
திருவவி நாசிக் கோயிலின் மேவிய பெருமாளே

முற்றிற்று.

உ

குருவே துணை.

39

# சாத்து கவி

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
| --- | --- | --- | --- |
| 1 | 21 | டேனே | டினே |
| டி. | 26 | பனவசச் | பனவச் |
| 3 | 22 | கவி | களி |
| டி. | 24 | றும்பா | றுசந்தம்பா |

| பக்கம் | பாட்டு | வரி | நூல் பிழை | திருத்தம் |
| --- | --- | --- | --- | --- |
| 2 | 14 | 4 | னவில் | ணவில் |
| 5 | 6 | 11 | மோர் | மொர் |
| 6 | 9 | 5 | மறு | மரு |
| டி. | டி. | 7 | வின்னடி | னின்னடி |
| 8 | காப்பு | 1 | கனே | கணே |
| டி. | 2 | 3 | சேயன் | சேயென் |
| டி. | டி. | 4 | மாயன் | மாயென் |
| டி. | 5 | 3 | துலுத் | தலுத் |
| 9 | 9 | 4 | ஞம்கை | ஞம்பிகை |
| டி | 11 | 1 | ணின்று | நின்று |
| 10 | 19 | 2 | யோரதி | யோரதி |
| டி. | 23 | 1 | லறக்கன் | லரக்கன் |
| டி. | 23 | 2 | கிடிற் | கங்கு |
| டி. | 26 | 4 | மலார்வ | லார்மவ |
| 11 | 28 | 2 | நின்னோர் | நின்றோர் |
| டி. | 32 | 2 | சிற்றிடி | சிற்றடி |
| 12 | 38 | 1 | வொடிடு | வோடிடு |
| 13 | 50 | 3 | புனகா | புனுகா |
| டி. | 51 | 2 | கண்களோடுன் | கண்களொடுன் |
| டி. | 55 | 2 | வெண்னு | வெண்ணு |
| 14 | 58 | 1 | வாவென | வானென |
| 15 | 70 | 3 | ஞய் | ரூய் |
| டி. | 74 | 3 | கிலன்னுன் | [illegible]னுன் |
| [illegible]6 | 78 | 2 | சொருபாது | சொருபாநு |
| [illegible] | 84 | 2 | யருத்தமிழ் | யருந்தமிழ் |
| [illegible] | 85 | 4 | டாயவற் | டாயவர்க் |
| 1[illegible] | 3 | 2 | காணிமுல | காணுமுல |
| 2[illegible] | 9 | 1,2,3,4, | பட | பட்ட |
| [illegible] | 12 | 1 | டுகளை | டுளை |
| [illegible] | டி | 4 | மலக்ங் | மலக்கங் |
| டி | 16 | 1,2. | மாட்டார் | [illegible] |
| 21 | 24 | 4 | நியனு | [illegible] |
| 25 | 5 | 1 | தனதன | தனந்தன |

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் ... -600 008
183868